# பணிநிறைவு வாழ்த்து!

திருமிகு. **ப. தீனதயாளன்,** மதிப்பீட்டு அதிகாரி
சுங்க இல்லம், சென்னை–1



பணி நிறைவு என்பது வாழ்க்கை
        பயணத்தில் ஓர் எல்லைக்கோடு!
மணியாக தொழில் கரத்தில்
        மருவிலாது நிறைந்த காலம்!
அணியாக தொடரு மிந்தநம்
        பணி ஓய்வின் காலம்,
பிணி இல்லாத நலத்தினோடு,
        பேரின்பம் ஆதல் வேண்டும்!

பக்குவமாய் ஆழ்மனத்தில் கனவுகளை
        பரிசீலிக்கச் செய்யும் காலம்!
எக்கணமும் இன்பம் எனும்
        எல்லைக் கோட்டை இயைந்தே
சிக்கெனப் பிடித்தே மகிழ்ந்து
        இனிவரும் நாளில் வாழ்கவென,
பக்குவமாய் பணி நிறைவு காணும்
        **தீனதயாளன்** தன்னைப் போற்றுவேனே!

பண்பில் சீர் அன்புடையோன் பலகாலம்
        மகிழ்ந்திங்கு வாழ்தல் வேண்டும்!
மண்பதை போற்றும் நிறைமதியோன்!
        பணியிலொரே களத்தில் பயணித்தோம்!
எண்ணிலா பேரன்பு கொண்டோம்!
        எங்களுக்கோர் நிறைவைத் தந்து
வண்ணமாய் நின்றதெங்கள் தந்தையர்
        பெயரொன்றே எனும் பெருமைதானே!

அன்புடன்,
**கு.ப. அசோகன்,** 27-11-2025
மேனாள் மதிப்பீட்டு அதிகாரி, சுங்க இல்லம், சென்னை.